காலை முரசு
பக்கங்கள்:-21

## ஈரானின் மூன்றாவது போர்க்கப்பலுக்கு இந்தியா அடைக்கலம்



ஈரானியக் கடற்படைக்குச் சொந்தமான ‘IRIS Lavan’ எனும் போர்க்கப்பலுக்கு

07

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 23 | சனிக்கிழமை | 07.03.2026 | அதிர்வு 219



# “ஈரான் மீது கை வைக்காதே!”

## கொழும்பில் அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராகப் பாரிய கண்டனப் போராட்டம்

சர்வதேச ரீதியில் ஈரானுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அழுத்தங்கள் மற்றும் போர் அச்சுறுத்தல்களைக் கண்டித்து, கொழும்பில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள தெவட்டகா பள்ளிவாசலுக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

07

## வல்லரசுகளின் மோதல்களுக்கு மத்தியில்

# இந்து சமுத்திரத்தைப் பாதுகாக்க இலங்கை - இந்தியா இணக்கப்பாடு

### புதுதுடில்லியில் விஜித ஹேரத் - ஜெய்சங்கர் உயர்மட்டப் பேச்சு

**இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் ஆகியோருக்கு இடையிலான தீர்க்கமான சந்திப்பு நேற்று மாலை புதுடில்லியில் நடைபெற்றது.**

**இந்தச் சந்திப்பு அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியாகப் பெரும் முக்கியத்துவம் பெற்றுள்ளது.**

06






பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றீடு இன்றி ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தேசத்திலும் தென்னிலங்கையிலும் கூட தீவிரமடைந்து வருகிறது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் அது ஏற்படுத்திய கொடூரங்களும் பற்றிய பல்லாயிரக்கணக்கான சோகக் கதைகள், மனதை உருக்கும் கொடூரங்கள் பற்றிய தகவல்கள் நமக்கு உண்டு.

ஆயினும் கேவலமான அந்தச் சட்டத்தின் நிலைமையை வெளிப்படுத்தும் இரண்டு சம்பவங்களை இன்று குறிப்பிட விரும்புகிறேன். இவை அந்தச் சட்டத்தின் அநீதி நிறைந்த கொடூர முகத்தை நமக்குக் காட்டி நிற்கின்றன. இந்தச் சம்பவங்கள் பற்றி முன்னரும் ஓரிரு தடவை கோடி காட்டி இருக்கிறேன். இனி விடயத்துக்குள் வருவோம்.

முதலாவது சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் ஒரு பிரமுகர். ஈழத்தில் நன்கு அறியப்பட்ட பல்துறைக் கலைஞர். நகைச்சுவை, வானொலி நாடகம், நடிப்பு, திரைப்படம், தொலைக்காட்சி, எழுத்து என்று பல துறைகளில் முத்திரை பதித்தவர்.

06









# ஈரான் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட 208 பேரும் வெலிசறை முகாமில்!

## திருகோணமலை துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டது கப்பல்

இந்தியக் கடற்படையால், பெப்ரவரி 15 – 25 ஆம் திகதி வரை விசாகப்பட்டினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச கடற்படை கண்காட்சியில் பங்குபற்றிய ஈரான் கடற்படை கப்பல்களில் ஒன்றான ஐ.ஆர்.ஐ.எஸ். புஷேஹர் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் திருகோணமலை துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பங்கேற்று மீண்டும் நாடு திரும்பிக் கொண்டிருந்த ஈரானிய கடற்படைக் கப்பலான ஐரிஸ் டெனா என்ற போர்க்கப்பல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடந்த 4ஆம் திகதி அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பலின் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளாகி மூழ்கியது.

இந்நிலையிலேயே பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருத்தில்கொண்டு ஐ.ஆர்.ஐ.எஸ். புஷேஹர் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வருவதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் அனுமதி கோரியிருந்தது. எவ்வாறிருப்பினும் இலங்கையின் கடல் சார் வர்த்தக பாதிப்புக்களைக் கருத்தில்கொண்டு அக்கப்பலுள்ளவர்கள் மீட்டு, பின்னர் அதனை

தொடர்ச்சி▼












# ஈரான் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட 208 பேரும் வெலிசறை முகாமில்!

## திருகோணமலை துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டது கப்பல்

தொடர்ச்சி▲

திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அரசு அனுமதியளித்தது.

அதற்கமைய அந்தக் கப்பலிலிருந்த 208 பேர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இலங்கைக் கடற்படையினரால் கொழும்புத் துறைமுகத்துக்குப் பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டனர். இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் 53 அதிகாரிகளும், 84 கெடட் அதிகாரிகளும், 48 சிரேஷ்ட கடற்படையினரும், 23 கடற்படையினரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் வெலிசறையிலுள்ள கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

இதேவேளை,தாக்குதலுக்குள்ளான ஐரிஸ் டெனா கப்பலிருந்த 90 பேரது சடலங்கள் தொடர்பான பிரேத பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலி – கராப்பிட்டிய வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தச் சடலங்களை ஈரானுக்கு அனுப்பி வைக்கும் வரை அவற்றை வைத்திருப்பதற்கான அதிகுளிரூட்டப்பட்ட இரு கொள்கலன்கள் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்தத் தாக்குதலுக்கு உள்ளான கடற்பிராந்தியத்தில் தொடந்தும் கண்காணிப்பு மற்றும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.
















# யாழ். - கிளிநொச்சி எரிபொருள் நெருக்கடிக்குத் தீர்வு: புதிய செயலி தொடர்பில் ஆளுநருக்கு விசேட விளக்கம்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அண்மைக்காலமாக ஏற்பட்ட எரிபொருள் வரிசை நெருக்கடிக் குத் தீர்வு காணும் வகையில் உருவாக்கப் பட்ட புதிய செயலி தொடர்பில், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேத நாயகனுக்கு விசேட விளக்கமளிக்கப் பட்டது.

இது தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடை பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிலவிய எரிபொருள் விநியோகச் சவால்களுக்குத் தொழில் நுட்ப ரீதியான தீர்வுகாண்பது தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரால் யாழ்ப்பா ணம் இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில் மாறனிடம் விசேட கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக் கைக்கு அமைவாக, யாழ்ப்பாணம் இந் துக் கல்லூரியின் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனான ரமேஷ் நாதன் கருவூலன் இந்தத் தொழில்நுட் பச் செயலியை வெற்றிகரமாக உரு வாக்கியுள்ளார்.

நேற்றைய கலந்துரையாடலின்போது, இப்புதிய செயலியின் தொழிற்பாடு மற் றும் பயன்பாடுகள் தொடர்பிபான விரி வான முன்னளிக்கையை மேற்படி மாண வன் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக் குச் செய்து காட்டினார்.

இதனைத் தொடர்ந்து, இச்செயலி யைப் பொதுமக்கள் பாவனைக்கு ஏற்ற வாறு மேலும் எவ்வாறு மேம்படுத்து வது என்பது தொடர்பில் விரிவாக ஆராயப் பட்டது. இனிவரும் காலங்களில், ஏதாவது ஒரு சில பிரதேசங்களில் மாத்திரம் எரிபொருளுக்கான வரிசை நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களில், எரிபொருள் விநியோகத்தை மிகவும் நேர்த்தியாகவும் மக்கள் எவ்வித சிரமங்களுமின்றியும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இந்தச் செயலியைப் பயன்படுத்த முடியும் என இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மிகக் குறுகிய காலத்துக்குள் இத்த கையதொரு தொழில்நுட்பத் தீர்வை வெற்றிகரமாக உருவாக்கிய மாணவ னின் ஆக்கபூர்வமான முயற்சிக்கும், அதனை முழுமையாக ஊக்குவித்த கல்லூரி அதிபருக்கும் ஆளுநர் தனது விசேட பாராட்டுக்களைத் தெரிவித்தார். மேலும், இந்தச் செயலியின் பயன்பாடு மற்றும் முன்னெடுப்புக்கள் தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தின் தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநரால் உத்தியோகபூர்வ கடிதமொன் றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தின் வட பிராந்திய முகாமையாளர் மற்றும் செயலியை உருவாக்கிய மாண வன் ஆகியோர் பங்கேற்றிருந்த னர்.











# இலங்கை ஒலிம்பிக் வீரர்கள் நிதி நன்கொடை

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசின் 'Rebuilding Sri Lanka' நிதியத்துக்கு இலங்கை ஒலிம்பிக் விளையாட்டு வீரர்கள் 5,82,786.18 ரூபா நிதி நன்கொடை அளித்தனர்.

இலங்கை ஒலிம்பிக் வீரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்ரீயானி குலவன்ச, ஜனாதிபதி மக்கள் தொடர்பு பணிப்பாளர் நாயகம் தர்மசிறி கமகேவிடம் இதற்கான காசோலையைக் கையளித்ததுடன், நிம்மி டி சொய்சா, சுனில் குணவர்தன, நிலுகா மற்றும் கயில் அபேசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்னிலும் விட 15 வயது மூத்த அவரை ஓரங்க நாடகக் கலைஞராக யாழ் மேடைகளில் கண்டும் வானொலியில் கேட்டும் நான் ரசித்துப் பிரமித்திருக்கிறேன். என்னுடைய இளம் வயதில் அவர் ஆங்காங்கே மேடையேற்றும் 'அண்ணை ரைட்..!' நாடகத்திற்காகப் பின்னால் அலைந்த நினைவு எனக்கு உண்டு.

அவர்தான் கே.எஸ்.பாலச்சந்திரன். கடந்த நூற்றாண்டில் தமிழினம் கண்ட ஒரு பெருமைமிகு கலைஞர். பாடசாலை காலத்தில் விளையாட்டு வீரராக தேர்ந்தவர். பல ஆண்டுகளாக இலங்கை உள்நாட்டு வருமானவரித் திணைக்களத்தில் பணி புரிந்தவர்.

90களில் ஆரம்பத்தில் அவரும் அவரது மனைவியாரும் கொழும்பில் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வருடக் கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர். கடற்படை தளபதி கிளன்ஸி பெர்னான்டோ தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்தோடு தொடர்புடைய 'புலிப் பயங்கரவாதி' ஒருவரை வீட்டில் தேநீர் கொடுத்து உபசரித்தனர் என அவர் மீதும் அவரது மனைவி மீதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

என் நினைவு சரி என்றால் அந்த புலிப் போராளியின் பெயர் பாபு.

பாபுவுக்கு தேநீர் கொடுத்து உபசரித்தார்கள் என்று பாலச்சந்திரனையும் அவரது மனைவியையும் அச்சுறுத்தி அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தை கையெழுத்திட்டுப் பெற்றுக் கொண்டது இலங்கைப் பொலிஸ். அதன் கீழ் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

சில ஆண்டுகள் வழக்கு இழுபட்ட சமயம் பாபு கைது செய்யப்பட்டார். ஆனால் கடும் துன்புறுத்தல்கள், சித்திரவதைகளை எதிர் கொண்ட போதும் அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை. அதனால் அவருக்கு எதிரான வழக்கு நின்று பிடிக்கவில்லை. அவர் விடுவிக்கப்பட்டார்.



கலைஞர் அமரர் கே.எஸ்.பாலச்சந்திரன்

இந்தச் சமயத்தில்தான் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து தடுப்புக் காவலில் இருந்த பாலச்சந்திரன் தம்பதியர் தாங்க முடியாத தொல்லையின் காரணமாக குற்றத்தை ஒப்புக்கொண்டாவது தங்களை விடுவித்து உதவுமாறு தங்கள் சட்டத்தரணி சுமந்திரனிடம் கோரியிருந்தனர்.

வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ்.எவ்.என்.ஜெயசூர்யா முன்னிலையில் வந்தது. அப்போது எதிராளிகளின் சட்டத்தரணியான சுமந்திரன் நீதிமன்றத்தின் கவனத்திற்கு ஒரு விடயத்தைக் கொண்டு வந்தார்.

'புலிப் பயங்கரவாதி' என்ற பாபுவுக்கு தேநீர் கொடுத்து உபசரித்த குற்றச்சாட்டுக்காக இந்தத் தம்பதியரை நீங்கள் மூன்று வருடங்களுக்கு மேலாக தடுப்புக் காவலில் வைத்திருக்கிறீர்கள். ஆனால் அந்த பாபு என்பவர் விடுவிக்கப்பட்டு, நிரபராதியாக இன்று வழக்கைப் பார்க்க வந்திருக்கிறார். இதோ நீதிமன்றத்தில் அமர்ந்திருக்கிறார். இவருக்குத் தேநீர் கொடுத்ததற்காகத்தான் 3 வருடங்களுக்கு மேல் இந்தச் சித்திரவதைகளை இந்தத் தம்பதியினர் அனுபவித்து வருகின்றனர் – என்று சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

ஆடிப் போனார் நீதிபதி. இந்த தம்பதியரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்திற்கு எதிரான விசாரணையை முன்னெடுத்து விவகாரத்தை முடிவு செய்யலாம் என்றார் நீதிபதி.

"இல்லை ஐயா....அப்படி நீங்கள் விசாரணையை ஆரம்பித்தால் அந்த விசாரணை முடியும் வரை இன்னும் சில வருடங்கள் இந்தத் தம்பதியர் தடுப்புக் காவலில் இருக்க வேண்டிவரும். அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டேனும் வெளியில் வர விரும்புகிறார்கள்." – என்றார் சுமந்திரன்.

அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி சொற்ப அபராதத்தோடும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையோடும் அந்தத் தம்பதியரை விடுதலை செய்தார்.

அதன் பின்பு கலைஞர் கே.எஸ்.பாலச்சந்திரன் கனடாவுக்குச் சென்று, கலை உலகில் நின்று சில காலம் தொடர்ந்து அற்புதமாகப் பணியாற்றிய பின்னர் காலமாகிவிட்டார்.


இந்தக் கதை ஓர் அற்புதமான கலைஞரின் வாழ்வை இந்தக் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் எப்படி சிதைத்து தழித்தது என்பதற்கு உதாரணம்.

அடுத்த வழக்கும் கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் நடந்தது. வழக்கின் எதிரி தரப்பில் முன்னிலையானவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராஜா என்று நினைக்கிறேன். அந்த வழக்கு விசாரணையின் போது அவர் ஒரு விடயத்தை நீதிமன்றத்துக்குச் சுட்டி காட்டினார்.

காலிக்கு அண்மையில் கடற்படையின் ஒரு கப்பல் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் ஒரு கரும்புலிப் போராளி குண்டு வெடித்துச் சிதறியதில் ஒரு கால் இழந்த நிலையில் உயிருடன் பிடிபடும் நிலை ஏற்பட்டது. அவருக்கு எதிரான வழக்குதான் அது.

"ஐயா... இந்த வழக்கில் சிக்கியுள்ள போராளி சம்பந்தப்பட்ட தாக்குதலில் ஒரு காலை இழந்து இங்கு நிற்கின்றார். அவருக்கு எதிராக அவரது ஒப்புதல் வாக்குமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்தத் தாக்குதலுக்காக மட்டக்களப்பில் இருந்து படகில் அவர் புறப்பட்ட போது, அந்தத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்த, இறங்குதுறை வரை வந்து நின்று வாழ்த்தி அவரை அனுப்பி வைத்தவர் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்புத் தளபதியாக இருந்த கருணா அம்மான். அவர்தான் இந்தப்போராளியை ஏவி விட்டவர். இப்போது அரசாங்கத்தின் பிரதி அமைச்சராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கிறார். அவரால் தூண்டப்பட்டு தாக்குதலுக்கு அனுப்பப்பட்டவர் ஒரு காலை இழந்து, வாழ்வைத் தொலைத்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கொடூரத்தில் சிக்குண்டு, அல்லலுறுகின்றார்" என்று சுட்டிக் காட்டினார் சட்டத்தரணி தவராஜா.

இந்தச் சட்டத்தின் கீழ் எண்பதுகளின் இறுதியில் தென்னிலங்கையில் இதுபோல ஜே.வி.பியினர் அனுபவித்த கொடூரங்களும் எண்ணிலடங்காமல் இருக்கின்றன. அப்படி இருந்தும் அந்தக் கட்சியின் சார்பில் இன்று அதிகாரத்துக்கு வந்தவர்கள், இந்தச் சட்டத்தையும் இதற்கு மாற்றீடாக மேலும் கொடூரமான சட்டத்தின் குரூரத்தையும் தங்கள் அதிகாரமாக கொண்டு, அவற்றைப் பிரயோகித்து அனுபவிக்கத் துடிக்கிறார்கள். இதுதான் அரசியல் அதிகாரத்தின் விநோதப் பண்பியல்பு.



## நல்லகண்ணுவின் நினைவேந்தல்

கடந்த வாரம் சென்னையில் காலமான இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும் தலைவர் ஆர். நல்லகண்ணுவின் நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தலைமையிலான இந்த நிகழ்வில் பெ. முத்துலிங்கம், மல்லியப்பு சந்தி திலகர், தெ.மதுசூதனன் பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங், எஸ். காண்டீபன் ஆகியோர் அஞ்சலியுரைகளை நிகழ்த்துவர். நிகழ்வை சமூக அறிவியல் அரங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

## இந்து சமுத்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு அமைச்சர்களும் விரிவாக ஆராய்ந்தனர். குறிப்பாக, பொருளாதார ஒத்துழைப்பு, முதலீடுகள் மற்றும் அண்டை நாடுகளுக்கு இடையிலான நட்புறவைப் பேணுதல் போன்ற விடயங்கள் இங்கு முதன்மை பெற்றன.

இருதரப்பு விடயங்களுக்கு மேலதிகமாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் பிராந்திய சவால்கள் குறித்தும் இரு நாட்டு அமைச்சர்களும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்த இரு நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

நேற்றுமுன்தினம் மாலை புதுடில்லியைச் சென்றடைந்த அமைச்சர் விஜித ஹேரத், அங்குள்ள இந்திய உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான சபையில் பிரேரணை நிறைவேற்றம்

பொது அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணைக்கு ஆதரவாக 108 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்படி, பொது அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை 100 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## ஈரானின் மூன்றாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியா அடைக்கலம் வழங்கியுள்ளது.

இதற்கமைய, 183 ஊழியர்களுடன் கூடிய இக்கப்பல் இந்தியாவின் கொச்சி துறைமுகத்தில் பாதுகாப்பாக நங்கூரமிடப்பட்டுள்ளது.

இக்கப்பல் மனிதாபிமான அடிப்படையில் அடைக்கலம் கோரியிருந்த நிலையில், இந்திய அரசு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சமீபத்திய நாள்களில் இந்து சமுத்திரத்தில் நடக்கும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய மூன்றாவது ஈரானிய கடற்படைக் கப்பல் இதுவாகும்.

இந்தியாவில் நடைபெற்ற கடற்படைப் பயிற்சிகளில்கலந்துவிட்டுதிரும்பும்போது, இலங்கையின் தெற்கு கடற்கரையிலிருந்து சுமார் 40 கடல் மைல் தொலைவில் சர்வதேச கடற்பரப்பில் ஈரானிய போர்க் கப்பலான ஐ.ஆர்.ஐ.எஸ். டெனாவை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஏவுகணை மூலம் தாக்கி மூழ்கடித்தது.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, இரண்டாவது ஈரானிய கப்பலான IRIS Bushehr, தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக இலங்கை கடல் எல்லைக்குள் நுழைய அனுமதி கோரியிருந்தது.

அதனைதொடர்ந்து, இலங்கை அரசு மனிதாபிமானத்தை கருத்தில் கொண்டு அதன் பணியாளர்களைக் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து இறக்கிவிட்டுக் கப்பலை திருகோணமலை துறைமுகத்துக்கு அனுப்பி வைத்தது.

தற்போது மூன்றாவது ஈரானியப்போர்க் கப்பலான 'IRIS Lavan' இந்தியாவால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

ஒரே காலப்பகுதியில் இரு ஈரானியப் போர்க்கப்பல்களில் ஒன்று இலங்கையின் வசமும் மற்றொன்று இந்தியாவின் வசமும் இருப்பது சர்வதேச இராணுவ ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

குறிப்பாக, அமெரிக்க – ஈரான் மோதல் போக்கு நிலவும் சூழலில், தெற்காசிய நாடுகளான இலங்கையும் இந்தியாவும் மனிதாபிமான அடிப்படையில் ஈரானுக்கு உதவி வழங்கியுள்ளமை முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்தியா மற்றும் இலங்கையின் இந்த நகர்வுகள், பிராந்தியத்தின் இறையாண்மையை உறுதிப்படுத்துவதோடு, வல்லரசுகளின் நேரடி மோதல்களுக்கு மத்தியில் ஒரு நடுநிலைத் தன்மையைப் பேணும் முயற்சியாகவும் பார்க்கப்படுகின்றது.

## "ஈரான் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"பாலஸ்தீனத்தின் நண்பர்கள்" அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில்ஈடுபட்டவர்கள்சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர்.

"ஈரான் மீது கை வைக்காதே!", "அமெரிக்க – இஸ்ரேலிய பயங்கரவாதத்தை நிறுத்து!", "ஈரான் மீதான அமெரிக்க – இஸ்ரேலிய போரைத் தவிர்" போன்ற கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பினர்.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான சூழலில், ஈரானின் இறையாண்மைக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றும், ஏகாதிபத்திய நாடுகளின் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தினர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வேலையின்மை

வறுமை, சமத்துவமின்மை மற்றும் வேலையின்மை ஆகியவை நாட்டில் மோசமாக அதிகரித்து வருகின்றன எனப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பிரசன்ன பெரேரா கூறியிருக்கின்றார்.

“வறுமை, சமத்துவமின்மை மற்றும் வேலையின்மை ஆகியவை ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியுடன் எவ்வாறு தொடர்புடையவை என்பதை பொருளாதார நிபுணர் டட்லி சீர்ஸ் விரிவாக விவாதித்துள்ளார். அவரைப் பொறுத்தவரை, பொருளாதாரம் வளரும்போது, வறுமை குறைய வேண்டும்,. வருமான இடைவெளிகள் குறைய வேண்டும். மேலும் வேலையின்மைக்கான தீர்வுகள் செயல்படுத்தப்பட வேண்டும்.’’ - என்று பேராசிரியர் பிரசன்ன பெரேரா சுட்டுகின்றார்.

2024 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட தொழிலாளர் பங்கேற்புக் கணக்கெடுப்பின்படி, தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 47 வீதமாக உள்ளது. இது 2017 இல் 54 வீதமாக ஆக இருந்தது. தற்போது சுமார் 7 வீதம் குறைவு. இலங்கையில் வேலை செய்யும் வயதுடைய மக்கள் தொகை 16.8 மில்லியன் ஆகும். இதில் ஆக, சுமார் 8 மில்லியன் பேர் மட்டுமே தொழிலாளர் விநியோகத்தில் தீவிரமாகப் பங்களிக்கின்றனர்.

மேலும் வேலையின்மை விகிதம் 4.4 வீதம் ஆகும். இதில் ஆண்களின் வேலையின்மை 3 வீதமாகவும், பெண்களின் வேலையின்மை 7.1 வீதமாகவும் உள்ளது. வேலை செய்யும் வயதுடைய பெண்களில் 30 வீதத்தினர் மட்டுமே முறையாகத் தொழிலாளர் படையில் பங்கேற்கின்றனர். இதனால் 10 பெண்களில் 7 பேர் வேலையில்லாமல் உள்ளனர். உயர் கல்வி நிலைகள் அதிக வேலையின்மை விகிதங்களுடன் ஒத்துப் போகின்றன எனத் தெரிகிறது. 20 முதல் 24 வரை வயதுடைய இளைஞர்களிடையே, வேலையின்மை 20.7 வீதத்தை எட்டுகிறது. அதாவது ஐந்து இளைஞர்களில் ஒருவர் வேலை இல்லாமல் இருக்கிறார். தற்போது, ஒன்றரை லட்சம் இளைஞர்களும் பெண்களும் வேலை தேடுகின்றனர்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் இலங்கையின் தொழிலாளர் சந்தையின் உண்மையான நிலையை குறைவாகவே மதிப்பீடு செய்திருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது. அப்படி இருந்தும் வேலையின்மைப் பிரச்சினை பூதாகரமாகத் தோற்றுகின்றது.

அத்தோடு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சுமார் 5 லட்சத்து 15 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளனர். 2024 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் மூன்று லட்சம் பேர் வெளியேறினர்.

2017–2018 உடன் ஒப்பிடும்போது வறுமை விகிதங்கள் இரட்டிப்பாகியுள்ளன. இப்போதைய கணக்கீடுகளின்படி 25 முதல் 30 வீத மக்கள் வறுமையில் வாழ்கின்றனர்.

தற்போது, அரசாங்கம் 18 வீதம் வற், 30 வீதம் ஒன்றிணைந்த வரி மற்றும் 36 வீதம் வருமான வரி உச்சவரம்பை விதிக்கிறது. 2025 வரி முறையை அழிவுகரமானது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விமர்சித்துள்ளது.

அதிக ஒன்றிணைந்த வரிகள் வேலைவாய்ப்பு உருவாக்கத்தைக் குறைத்துள்ளன. பெரிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் மூடல்களை எதிர்கொள்கின்றன. 2023 இல் 15.1 வீத தொழில்துறை வேலைவாய்ப்பு இழக்கப்பட்டது. சுமார் 30 நடுத்தர மற்றும் சிறிய தொழில்கள் மூடப்பட்டன. திறமையான நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது இலங்கையின் எதிர்காலத்திற்கு ஒரு பெரிய சவாலாக உள்ளது என்றெல்லாம் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த விடயங்களில் எல்லாம் அரசாங்கத்தின் அவசர கவனம் கோரப்படுகின்றது. அரசு கவனிக்குமா?




# ‘Rebuilding Sri Lanka’ நிதியத்திற்கு அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களினால் நிதி நன்கொடை

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அரசின் ‘Rebuilding Sri Lanka’ நிதியத்துக்கு அமெரிக்காவின் சென் பிரான்சிஸ்கோவில் வசிக்கும் இலங்கையர்கள் 10 இலட்சம் ரூபா நிதி நன்கொடை அளித்தனர்.

அமெரிக்காவின் சென் பிரான்சிஸ்கோவில் வசிக்கும் இலங்கையர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாலித ராஜபக்ஷ, நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மக்கள் தொடர்பு பணிப்பாளர் நாயகம் தர்மசிறி கமகேவிடம் இதற்கான காசோலையை ஒப்படைத்தார்.

# சட்டவிரோதமாக எடுத்து செல்லப்பட்ட 500 லீற்றர் மண்ணெண்ணை பறிமுதல்



சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட 500 லீற்றர் மண்ணெண்ணை பருத்தித்துறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இதப்போது பொலிரோ வாகனத்துடன் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முந்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மந்திகை பகுதியில் வைத்து மேற்படி பொலிரோ வாகனத்தில் பரல்களில் எரிபொருள் எடுத்துச் செல்லப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. உரிய ஆவணங்கள் இல்லாத நிலையில் மூன்று பரல்களில் சேமிக்கப்பட்டிருந்த 500 லீற்றர் மண்ணெண்ணை மற்றும் பொலிரோ ரக வாகனத்துடன் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து பெற்றுக்கொண்ட மண்ணெண்ணையை மணற்காட்டை சேர்ந்த நபர் ஒருவருக்காக எடுத்துச் சென்றதாக விசாரணையின் போது கைதான சாரதி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சாரதியையும் சான்றுப் பொருள்களையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.











# இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களுக்கு மிக விரைவாக நிரந்தர தீர்வுகளை வழங்குங்கள்

## பிரதமர் ஹரிணி வலியுறுத்து

“Rebuilding Sri Lanka” ஜனாதிபதி செயலணி, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியது.

“டித்வா” சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்த நிலைமையின் பின்னர், நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் மீட்பு, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக இந்த ‘Rebuilding Sri Lanka’ ஜனாதிபதி செயலணி நிறுவப்பட்டுள்ளது. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவான மற்றும் நிரந்தரமாக நிவாரணங்களை வழங்குதல், அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை வழமை நிலைக்குக் கொண்டு வருதல் மற்றும் நீண்டகால அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதை மேற்பார்வையிடுதல்ஆகியபணிகள்இந்தச்செயலணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலின் போது, ‘Rebuilding Sri Lanka’ செயலணியின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன், ‘Rebuilding Sri Lanka’ நிதிக்கு இது வரை கிடைத்துள்ள வெளிநாட்டு உதவிகள்மற்றும்செயலணியின்அடுத்தகட்டநடவடிக்கைகள் குறித்தும் குழு உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

டித்வா சூறாவளியினால் சேதமடைந்த வீடுகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான முழுமையான மதிப்பீட்டு அறிக்கை இம்மாத இறுதிக்குள் கிடைக்கப்பெறும் என இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

தற்போதும் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மிக விரைவாக நிரந்தர தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்திய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அவர்கள்தொடர்ந்தும்முகாம்களில்தங்கியிருப்பது நீண்டகாலப் பிரச்சினைகளை உருவாக்கக்கூடும் எனச் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் “சூம்” தொழில்நுட்பம் ஊடாக இணைந்திருந்ததுடன், அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள், கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கைத்தொழில் மற்றும்தொழில்முனைவோர்அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ.எச்.எம்.எச். அபயரத்ன, தொழில் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர, ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரசல் அபோன்சு உள்ளிட்டோர் மற்றும் குழுவின் சக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.














# வடக்கு அமைச்சின் செயற்பாடு குறித்து ஆளுநர் தீவிர மீளாய்வு

## 2026ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களுக்கு அங்கீகாரம்

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறை, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், கடந்த 2025ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் அடைவுகள் மற்றும் தற்போது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. அத்துடன், நடப்பு 2026ஆம் ஆண்டுக்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ள புதிய அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டுச் செயற்றிட்டங்களை வினைத்திறனாக நடைமுறைப்படுத்துவது குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் துறைசார் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.










# வடக்கின் பெரும் போரின் இறுதி நாள் ஆட்டம் இன்று

## வெற்றிக்காக இரு அணிகளும் பலப்பரீட்சை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் இடையிலான 119ஆவது வடக்கின் சமர் கிரிக்கெட் பெரும் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று நிறைவடைந்துள்ளது.

இரண்டாம் நாள் ஆட்டநிறைவில் சென். ஜோன்ஸ் கல்லூரி போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்த 248 ஓட்டங்களை அடைய இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பாடி வரும் யாழ். மத்திய கல்லூரியானது 120 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் காணப்படுகின்றது.

88யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்று வருகின்ற இந்தப் போட்டியின் முதல்நாள் (நேற்றுமுன்தினம்) ஆட்டநிறைவில் இரு அணிகளதும் முதல் இன்னிங்ஸ் நிறைவடைந்து 24 ஓட்டங்கள் முன்னிலை பெற்றவாறு தமது இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்தது சென். ஜோன்ஸ் அணி.

போட்டியின் இரண்டாம் நாளில் நேற்று தமது துடுப்பாட்டத்தினை தொடர்ந்த சென். ஜோன்ஸ் அணிக்கு உதயனன் அபிஜோய்சாந்த் சதமொன்றைப் பெற்றுக் கொடுத்தார். இதனால் அவ்வணியானது இரண்டாம் இன்னிங்ஸில் சிறந்த முன்னிலையைப் பெற்றுக் கொண்டது.

எனினும் அவ்வணியின் மத்திய வரிசை முரளி திசோனின் பந்துவீச்சில் தடுமாற சென். ஜோன்ஸ் கல்லூரி அணியானது 53.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்கள் எடுத்துக் கொண்டது.

சென். ஜோன்ஸ் அணியின் துடுப்பாட்டத்தில் வெறும் 105 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்ட அபிஜோய்சாந்த் 4 சிக்ஸர்கள் மற்றும் 15 பௌண்டரிகள் அடங்கலாக 121 ஓட்டங்கள் பெற்றார்.

மறுமுனையில் யாழ். மத்தியின் பந்துவீச்சில் முரளி திசோன் வெறும் 78பந்துகளுக்கு 7விக்கெட்டுக்களையும் வலன்டின் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும் சுருட்டினர்.

பின்னர் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 248 ஓட்டங்களை அடைய இரண்டாம் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தைத் தொடங்கிய யாழ். மத்திய கல்லூரி அணியானது சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொண்டது.

எனினும் அணியின் ஆரம்ப வீரர்களான கபிலன் அமலன் மற்றும் ஜெயசீலன் ஜெனோசன் ஆகியோரது விக்கெட்டுக்களை அடுத்து இரண்டாம் நாள் ஆட்டநிறைவில் யாழ். மத்தியானது 36 ஓவர்களில் 120 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாற்றமான நிலையில் காணப்படுகின்றது.

அவ்வணிக்கு களத்தில் நின்று நம்பிக்கை வழங்கும் முரளி திசோன் 22 ஓட்டங்களுடனும் அய்யாத்துறை கபிஷேக் ஓட்டங்களின்றியும் காணப்படுகின்றனர்.

சென். ஜோன்ஸ் அணியின் பந்து வீச்சில் குகதாஸ் மாதுளன் கணேசமூர்த்தி கௌசிகன் மர்பின் ரண்டயோ புவனேஸ்வரன் கிஷான்த் மற்றும் உதயனன் அபிஜோய்சாந்த் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் சாய்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் இறுதி நாளான இன்று தத்தமது அணியின் வெற்றிக்காக இரு அணியினரும் பலப்பரீட்சை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இன்றைய நாள் போட்டி மிகவும் விறுவிறுப்பாகவே அமையும்.





# வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளினுடைய அந்தரிப்பு எப்போதுதான் அரசுக்குப் புரியப்போகிறதோ?

## நாடாளுமன்றத்தில் ஆதங்கத்துடன் ரவிகரன் எம்.பி. கேள்வி

(விஜயரத்தினம் சரவணன்)

மத்திய கிழக்கின் அதிர்வுகளுக்கே அவசர நிலைதேடும் இலங்கை அரசிற்கு, கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்த நாட்டின் வடக்கு, கிழக்கில் தமது உறவுகளைக் கேட்டுத் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் வலிகள் எப்போதுதான் புரியுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி அவர்களின் உறவுகளால் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் எதிர்வரும் 08ஆம் திகதியுடன் ஒன்பது ஆண்டுகளை நிறைவுசெய்து பத்தாவது ஆண்டாகத் தொடரவுள்ள நிலையிலும் அவர்களுக்கான நீதி கிடைக்கவில்லை என்பதைச்சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற



பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகாலநிலையை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி அவர்களின் உறவுகளால் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் நாளை மறுநாளோடு (8ஆம் திகதியுடன்) ஒன்பது ஆண்டுகளை நிறைவுசெய்து பத்தாவது ஆண்டாகத் தொடரவுள்ளது.

என்னுடைய மகன் வருவான், என்னுடைய மகள் வருவாள், என்னுடைய கணவன் வருவார், என்னுடைய மனைவி வருவார், என்னுடைய அப்பா வருவார், Oஎன்னுடைய அம்மா வருவார் என்ற எதிர்பார்ப்போடு நாளும் காத்திருந்து மாறி வரும் அரசுகளையும் நம்பி ஏமாந்து, பன்னாடுகளிடமும் நீதி கேட்டு ஏங்கி ஏங்கியே ஒவ்வோர் உறவும் ஏக்கத்தோடு மரணிக்கின்றனர்.

இலங்கை அரசின் பிள்ளை உளவியல், பெண்ணிய விடுதலை, பாலின சமத்துவம், மனித உரிமை, முதியோர் நலன் பேணல் அனைத்துமே காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்கான உங்களின் நீதியில் பொய்த்துப்போயுள்ளது.

மத்தியகிழக்கின் அதிர்வுகளுக்கே அவசர நிலை தேடும் உங்களுக்கு அருகிலுள்ள எங்களின் அவதிகள் எப்போது தான் புரியப்போகிறது? – எனக் கேள்வி எழுப்பினார்.

---

# பிணவறையில் பெண்ணின் சடலத்தின் மீது பாலியல் உறவு மிருகத்தனம் நடைபெற்றதா?

## கிளங்கன் ஆதார வைத்தியசாலை விவகாரம் குறித்து விசாரணை

(பொகவந்தலாவ: எஸ்.சதீஸ் )

டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்ட பெண்ணின் உடலத்தின் மீது பாலியல் உறவு இடம்பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுவரெலியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுரவீர ஆராய்ச்சி அங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இந்தச் சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை வைத்து கொண்டு சிலர் அரசியலாக மாற்றவும் இனவாதத்தை உருவாக்கவும் முயற்சி செய்கிறார்கள். சிலர் ஒன்றுமே தெரியாது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க முயற்சிக்கிறார்கள். பொலிஸார் ஊடாக சந்தேக நபர்கள் மீது விசாரணகளை ஆரம்பித்துள்ளார்கள்.



அது நீதிமன்றம் வரை செல்லும். வைத்தியசாலையின் நிர்வாகம் ஊடாகவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வைத்தியசாலைக்கு நோய்வாய்ப்பட்டவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வைத்தியசாலை மீது நம்பிக்கை வர வேண்டும். அதனை உறுதி படுத்தி கொள்வது வைத்தியசாலை நிர்வாகத்தின் பொறுப்பாகும். பிரேத அறை கட்டாயமாக பூட்டப்பட வேண்டும். அது பூட்டப்பட்டதா என்பது எமக்கு தெரியாது. ஓர் இறந்த உடலம் குளிரூட்டிப் பெட்டியில் வைக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு அதுவும் இடம்பெறவில்லை. வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு அறிவித்திருக்கிறோம். மக்களுக்கு சிறந்த சேவையை வைத்தியசாலை முன்னெடுக்கவேண்டும்.– என்றார்

சம்பந்தப்பட்ட நாளில் இரவு வேளையில் பிணவறைக்குள் நுழைந்த மூன்று ஊழியர்கள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த ஊழியர்கள் உடனடியாக பணியிலிருந்து நீக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அறிவியல் ரீதியான மற்றும் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சடலங்களை முறையாக குளிரூட்டிகளில் வைக்காதமை மற்றும் பாதுகாப்புக் குறைபாடுகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் தனது அதிருப்தியை வெளியிட்டார்.

குற்றவாளிகளுக்கு தராதரம் பாராது கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும், வைத்தியசாலை கட்டமைப்பு மீதான மக்களின் நம்பிக்கை சீர்குலைய விடமாட்டோம் என்றும் மஞ்சுள சுரவீர ஆரச்சி குறிப்பிட்டார்.



# யாழ். பல்கலை ஊடகக் கற்கைகள் மாணவர்களின் சஞ்சிகை, குறுந்திரைப்படங்கள் நேற்று வெளியீடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சஞ்சிகை “கனலி“ – இதழ் 06 வெளியீடும், குறுந்திரைப்பட விழாவும் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடத்தின் பதில் பீடாதிபதி கலாநிதி கி.சண்முகநாதனும் ஊடகத் துறைப் பேராசிரியர் சி.ரகுராமும் கலந்து சிறப்பித்தனர்.



“கனலி” சஞ்சிகை வெளியீட்டைத் தொடர்ந்து சஞ்சிகைக்கான கருத்துரைகளை கல்வியியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்தினார். சஞ்சிகை வெளியீட்டினைத் தொடர்ந்து மாணவர்களால் இயக்கப்பட்ட குறும்படங்களின் திரையிடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊடகத் துறை சார்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு 7 பில்லியன் அமெரிக்க டொலரை தாண்டி உயர்வு

இலங்கையின் உத்தியோகபூர்வ அந்நியச் செலாவணி கையிருப்பு, கடந்த 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் முதன்முறையாக 7 பில்லியன் அமெரிக்க டொலர் எல்லையைத் தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 6.832 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த உத்தியோகபூர்வ கையிருப்பு, பெப்ரவரி மாத இறுதியில் 7.284 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இது ஒரு மாத காலப்பகுதிக்குள் 6.6 வீத வளர்ச்சியாகும்.

கடந்த 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர், இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 7 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.



பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வரும் நிலையில், வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றம் மற்றும் சுற்றுலாத் துறை மூலமான வருமானம் போன்ற காரணிகள் இந்த அதிகரிப்புக்கு முக்கிய பங்களிப்பு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மத்திய கிழக்கு போர் பதற்றம்:

# இலங்கையிலுள்ள அமெரிக்கர்களுக்கு தூதரகம் விடுத்த விசேட அறிவித்தல்

நாட்டில் வசிக்கும் அமெரிக்கப் பிரஜைகளுக்கு, இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அதன்படி, இலங்கையில் தங்கியுள்ள அமெரிக்க பிரஜைகள் அவசர தேவைகளுக்கு 011 202 8500 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் பதற்ற நிலையை தொடர்ந்து, இலங்கையில் வசிக்கும் அமெரிக்கப் பிரஜைகளுக்கு இந்த அவசர அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.




அத்துடன், வானூர்திகள் பற்றிய தகவல்களுக்கு 1912 என்ற துரித இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்த முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை, திங்கள் முதல் வியாழன் வரை பிற்பகல் 1.00 மணி முதல் 2.00 மணி வரை முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தேவையான பாதுகாப்பு நிலைமைகள் குறித்த தகவலுக்கு அமெரிக்க தூதரக வலைத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் தகவல்களைப் பெறலாம் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

# நாட்டில் வெப்பநிலை அதிகரிப்பு: பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை

சபரகமுவ மாகாணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பல மாவட்டங்களில் வெப்பச் சுட்டெண் கணிசமாக அதிகரிக்கும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெப்பம் தொடர்பான நோய்களைத் தவிர்க்க பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.

போதிய அளவு தண்ணீர் குடிப்பது, வெளிர் நிற ஆடைகளை அணிவது மற்றும் வெப்பம் அதிகமாக இருக்கும் நேரங்களில் கடினமான உடற்பயிற்சிகளைத் தவிர்ப்பது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.



வெப்பச் சுட்டெண் என்பது வெறும் காற்றின் வெப்பநிலையை மட்டும் குறிக்காமல், ஈரப்பதத்தையும் கருத்தில் கொண்டு மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலையைப் பிரதிபலிக்கிறது என்று திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும், முதியவர்கள் போன்ற பாதிப்புக்குள்ளாகக்கூடிய நபர்களைக் கண்காணிப்பதன் முக்கியத்துவத்தை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதிக வெப்பம் நிலவும் காலங்களில் குழந்தைகளை வாகனங்களுக்குள் தனியாக விட்டுச் செல்ல வேண்டாம் என்றும் எச்சரித்துள்ளனர்.

பொதுமக்கள் வளிமண்டலவியல் திணைக்களத்தின் செய்திகளைத் தொடர்ந்து அவதானிக்குமாறும், தங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.





## விமானப்படையின் 75 ஆவது ஆண்டு விழா:

# இரத்மலானையில் வான் சாகசங்களை நேற்று ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி

இலங்கை விமானப்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நடைபெறும் கண்காட்சி மற்றும் வான் சாகச நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இரத்மலானை, இலங்கை விமானப்படை தளத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

விமானப்படைத் தளத்துக்கு வருகை தந்த முப்படைகளின் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, விமானப்படை மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

பின்னர் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்ட ஜனாதிபதி, வான் சாகசங்களையும் கண்டுகளித்தார்.

விமானப்படை அருங்காட்சியகத்தில் ஜனாதிபதி சிறப்பு நினைவுக் குறிப்பை இட்டதுடன், இந்நிகழ்வைக் குறிக்கும் வகையில், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நினைவுப் பரிசையும் வழங்கினார்.

இலங்கை விமானப்படையின் 75 ஆண்டுகால சிறப்புமிக்க சேவையை பொதுமக்களுடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் இந்தக் கண்காட்சி மற்றும் வான் சாகச நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கல்வி ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு வானூர்தி மற்றும் விமான தொழில்நுட்ப அரங்குகளையும் இது கொண்டுள்ளது.

இலங்கை விமானப்படையின் விமானங்களை மிக அருகில் சென்று பார்க்கவும் அவற்றின் தொழில்நுட்ப விவரங்களைப் பற்றி அறியவும் இது வாய்ப்பை வழங்குவதுடன், விமானப்படையின் அனைத்து தொழில்முறையிலான தனித்தனி அரங்குகள் மற்றும் வான்வழிப் பறப்பிற்காக ஏராளமான இலங்கை விமானப்படை விமானங்கள் மற்றும் சிவில் விமானங்கள் கண்காட்சியில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், விமானப்படை ஹெலிகாப்டர்கள், போக்குவரத்து விமானங்கள் மற்றும் ஜெட் விமானங்களின் வான்வழி சாகசங்கள், இரவு நேர ட்ரோன் காட்சிகள், விமானப்படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்ச்சிகள், விமானப்படை விசேட பிரிவினால் மேற்கொள்ளப்படும் மீட்பு நடவடிக்கைகள், தீயணைப்புக் காட்சிகள், பரிசூட் காட்சிகள் மற்றும் அங்கம்பொர சண்டை காட்சிகள் மற்றும் பல்வேறு கலாசார நிகழ்வுகள் இதில் உள்ளடங்குகின்றன. இந்தக் கண்காட்சி மற்றும் வான் சாகச நிகழ்வுகளை நேற்று முதல் நாளை வரை, தினமும் பிற்பகல் 2 மணி முதல் இரவு 10 மணி வரை பொதுமக்கள் கண்டுகளிக்கலாம்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அனுர கருணாதிலக, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜெயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா, மார்ஷல் ஒப் த எயார்போஸ் ரொஷான் குணதிலக, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய உட்பட சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் சிறப்பு அதிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

















# லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் மாற்றமில்லை

மார்ச் மாதத்திற்கான சமையல் எரிவாயுவின் விலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்திலும் லிட்ரோ எரிவாயுவின் விலையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3690 ரூபாவாகவும் 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1482 ரூபாவாகவும் உள்ளது.

2.3 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 694 ரூபா என லிட்ரோ நிறுனம் தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்திற்காக 38,000 மெற்றிக்தொன் எரிவாயு முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம் கூறுகின்றது.

அதில், தற்போது வரை 7800 மெற்றிக் தொன் எரிவாயு நாட்டை அண்மித்துள்ளது.

# நாம் விரும்பாத சூழலுக்குள் இலங்கை தள்ளப்பட்டுள்ளது

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல எச்சரிக்கை



நாம் விரும்பாத ஒரு சூழலிலும், நாடு தற்போது ஒரு போர்ச் சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சமீபத்திய வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிகவும் பயங்கரமான ஒரு செயன்முறையை வேடிக்கை பார்க்கும் ஒரு தரப்பாக நாம் மாறியுள்ளோம் என அவர் கவலை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எப்போது, யார், எவ்வாறு பாதிப்புக்குள்ளாவார்கள் என்பதைக் கணிக்க முடியாத ஒரு நிலை உருவாகியுள்ளது.

அண்மையில் காலி கடல் எல்லைக்கு அப்பால் தாக்குதலுக்குள்ளான “ஐரிஷ் டெனா” கப்பல் சம்பவம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் நடக்கும் போரின் தாக்கம், ஒரே நாளில் காலி கராபிட்டிய மருத்துவமனையை சடலங்களால் நிரப்பியுள்ளது.

இத்தகையதொரு பாரிய பொறுப்பு எப்போது, யாருக்கு, எவ்வாறு வரும் என்பதை எம்மால் ஊகிக்க முடியாதுள்ளது. இந்த நிலைமை நாட்டின் சாதாரண மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடியபாதிப்புகளைமுன்கூட்டியேகணிக்க முடியாது.

அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பிப்பதன் மூலம் நமக்கு ஒரு வான் பாதுகாப்பு கவசம் கிடைக்காது. ஆனால், நம்மால் முடிந்தவரை அச்சுறுத்தல்களுக்குத் தயாராக இருக்க இது ஒரு வாய்ப்பை வழங்கும். அதனால்தான் நாம் முன்கூட்டிய பாதுகாப்பு உத்திகளைப் பயன்படுத்த வேண்டும்,” என அவர் வலியுறுத்தினார்.

# கர்நாடகாவில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கு தடை

கர்நாடகாவில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டு உள்ளது. இது குறித்த அறிவிப்பை சட்டப்பேரவையில் முதல்வர் சித்தராமையா வெளியிட்டார்.

கர்நாடக முதல்வர் சித்தராமையா நேற்று சட்டப்பேரவையில் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அப்போது அவர் உரையாற்றுகையில்,

“16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அதிகளவில் செல்போன் மற்றும் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதால் அவர்களின் மனநலம், கல்வி, எதிர்காலம் பாதிக்கப்படுவது அண்மையில் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்தது.

சமூக வலைதளங்களுக்கு சிறார் அடிமையாவதால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க கர்நாடக அரசு உறுதிப்பூண்டுள்ளது. அதனால் 16 வயதுக்கு குறைவான சிறார் சமூக வலைதளங்களை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படுகிறது.” என்று தெரிவித்தார்.




கர்நாடக முதல்வர் சித்தராமையாவின் இந்த அறிவிப்பை காங்கிரஸார் மட்டுமல்லாமல் பா.ஜ.க, ம.ஜ.த உள்ளிட்ட எதிர்க்கட்சியினரும், கல்வியாளர்களும் வரவேற்றுள்ளனர். நாட்டிலேயே முதல் மாநிலமாக கர்நாடகா இந்த நல்ல முடிவை எடுத்திருப்பதாக சமூக ஆர்வலர்கள் பாராட்டி உள்ளனர்.

# 2030 ஆம் ஆண்டினை இலக்காக கொண்டு 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

தமிழகத்தில் 2030 ஆம் ஆண்டை இலக்காக கொண்டு பல்வேறு தொலை நோக்குத் திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார்.

தொழில் துறையில் 18 லட்சம் கோடி இந்திய ரூபா முதலீடு, 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, அனைத்து அரசுப் பள்ளிகளிலும் ‘ஸ்மார்ட் வகுப்பறை’, விவசாய சாகுபடி பரப்பு 50 லட்சம் ஹெக்டேராக அதிகரிப்பு என்பது உட்பட பல்வேறு திட்டங்கள் ‘திராவிட மொடல் 2.0’ ஆட்சியில் செயல்படுத்தப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

தமிழக அரசின் ‘உங்க கனவ சொல்லுங்க’ திட்டத்தின் நிறைவாக ‘தமிழ்நாடு 2030 – கனவுகள் மெய்ப்படும்’ எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“கடந்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களால் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். அரசின் திட்டங்களால் பயனடையாத குடும்பங்களே தமிழகத்தில் இல்லை என்று கூறும் அளவுக்கு ஒவ்வொரு தரப்புக்கும் பார்த்துப் பார்த்து செய்துள்ளோம்.

அரசியல் ரீதியாக எழுந்த சில நெருக்கடிகளை சமாளித்துதான் பல திட்டங்களை செயல்படுத்தினோம். இந்த ஆட்சியின் சாதனைகளை நம்பி உறுதியாக கூறுகிறேன். அடுத்தும் தி.மு.க. ஆட்சிதான். நமது சாதனைகளின் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சி இருக்கும்.

அடுத்த 5 ஆண்டுகளில் தமிழகத்தின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும் என ஒரு ‘ப்ளூ பிரின்ட்’ தயாரிக்க திட்டமிட்டோம். அதற்காக, தமிழகத்தின் 1.80 கோடி குடும்பங்களிடம் நேரடியாகசென்று, அவர்களது தேவைகளைக் கேட்டறிந்தோம். அதில் முன்னுரிமை அடிப்படையில் ‘தமிழ்நாடு 2030’ எனும் 14 முக்கிய அம்சங்களை அறிவிக்கிறேன்.

2030 ஆம் ஆண்டுக்குள் கிராமப்புறங்களில் ‘கலைஞர் கனவு இல்லம்’ திட்டத்தின்கீழ் 5 லட்சம் வீடுகள், நகர்ப்புறங்களில் 2 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்.

‘நலமுடன் தமிழ்நாடு 2030’ திட்டத்தில் அனைவருக்கும் போதிய மருத்துவக் காப்பீடு கிடைக்க வழிசெய்யப்படும். நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், புற்றுநோயைக் கண்டறிய சிறப்பு முகாம்கள், மாவட்டம்தோறும் மனநல ஆலோசனை மையம் அமைக்கப்படும்.

விவசாய சாகுபடி பரப்பு 50 லட்சம் ஹெக்டேராக உயர்த்தப்படும். 43 லட்சம் உழவர்களுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டு, இயற்கை விவசாயம் 17 ஆயிரம் ஹெக்டேராகவும், உயிர் வேளாண்மை ஒரு லட்சம் ஹெக்டேராகவும் விரிவுபடுத்தப்படும். நுண்ணீர்ப் பாசனம் 21 லட்சம் ஹெக்டேராக விரிவுபடுத்தப்பட்டு, மேற்கு, கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் 1,000 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் கட்டப்படும். உணவு உற்பத்தி 1.25 கோடி தொன்னாக உயர்த்தப்படும். 1.25 லட்சம் உழவர்களுக்கு வேளாண் கருவிகள் வழங்கப்படும்.

அனைத்து அரசு, அரசு உதவிப் பள்ளிகளிலும் ‘ஸ்மார்ட் வகுப்பறை’ அமைக்கப்படும். ‘வெற்றிப் பள்ளிகள் திட்டம்’ மூலம் 1,000 மாதிரிப் பள்ளிகள் விரிவுபடுத்தப்படும்.” என்று தெரிவித்துள்ளார்.





# சரணடைவது மட்டுமே தீர்வு: ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை



ஈரானுடனான போர் தீவிரமடைந்த நிலையில், நிபந்தனையற்ற சரணாகதி தவிர வேறு எந்த ஒப்பந்தத்திற்கும் இட மில்லை என்று அமெரிக்க ஜனனாதி பதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள் ளார்.

ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலை தளப் பதிவில், "நிபந்தனையற்ற சர ணாகதியைத் தவிர ஈரானுடன் வேறு எந்த ஒப்பந்தமும் கிடையாது. அதற்குப் பிறகு, சிறந்த மற்றும் ஏற்றுக்கொள்ளத் தக்கத் தலைவர்(கள்) தேர்ந்தெடுக்கப் பட்டால், நாங்களும் எங்களது அற்புத மான மற்றும் மிகவும் துணிச்சலான கூட்டாளிகளும் இணைந்து, ஈரானை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டெடுக்க அயராது உழைப்போம்.

இதன் மூலம் ஈரானைப் பொருளாதார ரீதியாக முன்னெப்போதையும் விடப் பெரியதாகவும், சிறந்ததாகவும் மற்றும் வலிமையானதாகவும் மாற்றுவோம். ஈரானுக்கு ஒரு சிறந்த எதிர்காலம் அமை யும். ஈரானை மீண்டும் சிறந்த நாடாக் குவோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை அன்றும் ஈரான் தலைநகர் டெஹ்ரான் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசின. அதற்கு ஈரான் தரப்பும் பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேல் மீதும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகள் மீதும் ஈரான் பதில் தாக்குதல் மேற் கொண்டுள்ளது.

கடந்த வாரம் தொடங்கிய இந்தப் போரில் அமெரிக்கா, இஸ்ரேல் ராணு வத்தின் கூட்டுத் தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி உயிரிழந்தார். மேலும், ஈரான் ஈராணுவ முகாம்கள் மற்றும் அணுசக்தி சார்ந்த திட்டப்பணிகள் நடைபெறும் இடங்களை யும் அமெரிக்கா, இஸ்ரேல் தரப்பு தாக்கி வருகின்றன. ஈரானில் இதுவரை பலியானோர் எண்ணிக்கை 1,000 ஐ கடந்துவிட்டதும் கவனிக்கத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, மத்திய கிழக்கில் போர் நீடித்து வருவதால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை யில் பெரும் ஏற்ற இறக்கங்கள் காணப் படுகின்றன. இது குறித்து முதலீட்டாளர் கள் கவலை கொள்ளத் தேவையில்லை என்றும், நிலைமை விரைவில் கட்டுக் குள் வரும் என்றும் அமெரிக்காவின் பொருளாதார நிபுணர்கள் தெரிவித் துள்ளனர்.

# கமேனியின் பிரம்மாண்டமான நிலத்தடிப் பதுங்கு குழி அழிப்பு

## இஸ்ரேலிய இராணுவம் அதிரடி தாக்குதல்



தெஹ்ரானில் அமைந்துள்ள ஈரானின் முன்னாள் உயர்மட்டத் தலைவருக்குச் சொந்தமான இரகசிய 'நிலத்தடி பதுங்கு குழி' ஒன்றை தாம் அழித்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் உரிமை கோரி யுள்ளது.

ஈரானின் முன்னாள் உயர்மட்டத் தலை வர் அலி கமேனி உயிருடன் இருந்த போது அவருக்காக உருவாக்கப்பட்ட பிரம்மாண்டமான நிலத்தடி பதுங்கு குழி ஒன்றை இலக்கு வைத்து பாரிய வான் தாக்குதலை நடத்தியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ள தாக அல்ஜெஸீரா செய்திகள் தெரிவிக் கின்றன.

சுமார் 50 இஸ்ரேலிய போர் விமா னங்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபடுத் தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெஹ்ரானின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த நிலத்தடி வளாகத் தின் மீது சுமார் 100 குண்டுகள் வீசப்பட்டு அவை முற்றாக அழிக்கப்பட்டுள் ளன.

இந்த நிலத்தடி வளாகம் தெஹ்ரான் நகரின் பல வீதிகளுக்குக் கீழ் நீண்டு பரந்திருப்பதாகவும், இதில் உயர்மட்டக் கூட்டங்களை நடத்துவதற்கான பிரத்தி யேக அறைகள் மற்றும் பல நுழைவாயில் கள் இருந்தன எனவும் இஸ்ரேல் குறிப் பிட்டுள்ளது.

அலி கமேனி கொல்லப்பட்ட பின்ன ரும், ஈரான் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதி காரிகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் இந்த நிலத்தடி வசதியைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்ததாக இஸ்ரேல் உரிமை கோரியுள்ளது.

இஸ்ரேல் உளவுத்துறையின் "பிரிவு 8200" மற்றும் "பிரிவு 9900" ஆகியன பல வருடங்களாக மேற்கொண்ட நுணுக் கமான திட்டமிடலின் பின்னரே இந்தத் தாக்குதல் மிகத் துல்லியமாக முன்னெ டுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

யுத்தகாலங்களில்அவசரகாலத்தலை மையகமாகப் பயன்படுத்துவதற்கா கவே இந்த அதிநவீன பதுங்கு குழி வடிவ மைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படு கின்றது.

# இன்றைய ராசி பலன்கள்- 07.03.2026




இன்று சவால்களை சந்திக்க அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க மாட்டீர்கள். சக பணியாளர்கள் ஆதரவாக இருக்க மாட்டார்கள். அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்துக்காகச் செலவு செய்ய நேரும்.




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திச ாலித்தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்தநேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.




இன்று பலன்கள் கலந்து காணப் படும். இன்று மனதில் தெளிவு வேண் டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுத அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.

உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாய் இருக்க பணம் செலவு செய்ய நேரும்.




இன்று தியானம் அல்லது பிரார்த் தனை மேற்கொள்வது மிகவும் அவசி யம்.அதன் மூலம் எதிர்மறை எண்ணங் களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.இன்று பண வரவு அதிகமாக இருக்காது. என்றாலும் பணத்தை சிறப்பாக கையாண்டால் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த இயலும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும். யோகா மற்றும் தியா னம் மூலமும் பலன் பெறலாம். இத னால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப் பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்பதாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப்போவதும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம்.




உங்கள் இலக்குகளை அடை வதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்து கொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்துகொள்ளவும் சில முக்கியமான விஷ யத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.

சாதரணமாக செய்யும் செலவைக் காட்டிலும் இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். முடிந்த அளவு செலவைக் குறைக்க வேண்டும்.




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச் சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப் பணிகளைக் கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். பதட்டப்படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள்- 07.03.2026




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதை அடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்தியமும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள்.இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள்.



நீங்கள் இன்று உணர்ச்சிப்பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளாதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத்தில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.

# ஓமானில் வாழும் இலங்கையர்களின் நலன் தொடர்பில் கலந்துரையாடல்



ஓமானில் வாழும் இலங்கையர்களின் நலன் தொடர்பில் ஓமான் வெளியுறவு அமைச்சர் சையித் பத்ர் அல் புசைதியிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இதன்போது, பிராந்தியத்தில் நிலவிவரும் சூழல் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதுடன், பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் உறுதிப்பாடு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது குறித்து அமைச்சர் விஜித ஹேரத் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

"ஓமான் வெளியுறவு அமைச்சர் சையித் பத்ர் அல் புசைதியுடன் உரையாடினேன். இதன்போது, பிராந்தியத்தில் நிலவிவரும் சூழல் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதுடன், பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் உறுதிப்பாட்டையும் மீண்டும் உறுதிப்படுத்தினேன்.

ஓமானில் வாழும் இலங்கை சமூகத்தினருக்கு ஓமான் தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவிற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். ஓமானிலுள்ள இலங்கை பிரஜைகளின் நலன் மற்றும் நல்வாழ்விற்காக ஓமான் அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என அமைச்சர் அல் புசைதி உறுதியளித்தார்." என்று குறிப்பிட்டுள்ளார்.